**நாள்: 04.03.2026**
**O.S. No. 72/2022**

**வா.சா.1**
**பெயர்: பிரின்ஸ், த/பெ. அருள்சிங்**

**1முதல் 3, 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் வாதி நிறுவனத்தின் பங்குதாரருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் நான்தான் பங்குதாரர். வாதி நிறுவனம் 23.12.1998ல் சென்னையில் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி பதிவு செய்யப்பட்ட தேதியில் வாதி நிறுவனத்தில் இருந்த பங்குதாரர் மொத்தம் எத்தனை பேர் என்றால் 2 பேர். என் வழக்குரை முதல் பாராவில் பங்குதாரர்கள் குறித்து நான் கூறியுள்ள விபரங்களுக்கு முரணாகவோ மேற்படி பங்குதாரர்கள் எண்ணிக்கை குறித்து தவறாக கூறுகிறேன் என்றாலும் பதிவு செய்யப்பட்டபோது 7 பேர் வாதி நிறுவனத்தின் பங்குதாரர்களாக இருந்தார்கள் என்றாலும் சரியல்ல. கடந்த 1998 வாதி நிறுவன பதிவிற்கு பிறகு நான் எதன் அடிப்படையில் வாதி நிறுமத்தை நடத்தி வருகிறேன் என்றால் 2008ல் நிறுமம் மறுசீரமைப்பு செய்யப்பட்டது. அவ்வாறு மறுசீரமைப்பு செய்ததற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாதி நிறுவன தொழில் உற்பத்திக்கு இடையூறு ஏற்படுத்தியதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த சொத்து விபரத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் புலஎண். 205/3, 206/1A, 206/2A, 212/1A சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு சொத்தின் விஸ்தீரணம்

எவ்வளவு என்றால் சுமார் 0.86 ஹெக்டர் விஸ்தீரணம் ஆகும். நான் வழகுக்குரையில் தாவா சொத்திற்கான நான்கெல்லை, நிறுமம் கதவு எண் மற்றும் பூரா விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.03.04 18:29:17 +0530